தைச் சேர்ந்தவர்களும், கடற்கரைப் பகுதிகளிலே இருக்கின்றவர்களும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக மீனவர்களும் ஆதி திராவிட மக்களும் தங்களுடைய உடமைகளையும் வீடுகளையும் இழந்து அதனாலே பல்வேறு வேதனைகளுக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதே போல மின்சாரம் தாக்கி மறைந்தவர்களும் நம்முடைய உதவியிலே வரவேண்டியவர்கள். கடலில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் காணவில்லை என்ற நிலையிலிருந்து மீனவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்கிறது. இந்த நிலையில் மாநில அரசினுடைய நிதியிலிருந்து பல்வேறு வகையான உதவிகளைச் செய்கின்ற இந்த நேரத்தில் மத்திய அரசின் சார்பிலும் இதற்கான நிதி உதவிகள் கிடைக்குமா என்று ஆவலோடு எதிர்பார்த்த நேரத்தில் நேற்றைக்கு அறிவிக்கப்பட்ட அறிவிப்பு மத்திய அரசானது, இருக்கின்ற அறிவிப்பையே திரும்ப ஒன்று அறிவித்து, அது மிகப் பெரிய விளம்பரமாக ஆக்கப்பட்ட காரணத்தாலே மாநிலத்திலே இருக்கின்ற மக்கள் எல்லாம் மிகப் பெரிய உதவி கிடைத்துவிட்டதோ என்று மகிழத்தக்க அளவிற்கு இருந்த ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கு விளக்கம் அளித்ததன் மூலமாக அந்த உதவி கிடைத்தது மாதிரி இருந்ததே தவிர கிடைக்கவில்லை என்று தெரிந்த நேரத்தில் நமக்கு ஒரு வகையிலே மிகுந்த வேதனையாக இருந்தாலும் இன்று காலையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. துணைப் பிரதமர் புயலினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களிலே இறந்தவர்களுக்கு எல்லாம் 25,000 ரூபாய் நிதி அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி கிடைத்து, மின்சாரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், கடலிலிருந்து காப்பாற்ற முடியாமல் இறந்தவர்களுக்கும் நாம் அந்த உதவித் தொகையை வாங்கித் தர முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இந்த பாதிப்புக்குள்ளான அத்தனை பேர்களையும் கணக்கு எடுத்து விரைவாக இந்த உதவித் தொகைகள் வழங்குகின்ற அந்தப் பணியை அரசு மேற்கொண்டு இருக்கிறதா, அதற்கான நடவடிக்கைகள் என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: : பேரவைத் தலைவர் அவர்களே, புயல் குறித்தும் அது தவிர்க்கப்பட்டது குறித்தும், மழையின் காரணமாக ஓரளவு தமிழ்நாட்டிலே சில பகுதிகளில் குறிப்பாக சென்னையில், செங்கை—அண்ணா மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஆதி திராவிட மக்கள், மீனவ மக்கள் ஆகியோர் குறித்தும், இந்த அவையிலே 2 அல்லது 3 தடவைகளுக்கு மேலாக விளக்கங்களை அளித்து இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார், ஏதோ மத்திய அரசு விளம்பரத்திற்காக ஒரு செய்தியை அறிவித்ததாக. நேற்று நான் இங்கு வைத்த விளக்கத்திற்குப் பிறகும் அதைச் சில பேர் புரிந்து கொள்ளாமல் இருப்பது விந்தையான ஒன்றாகும். ஏனென்றால்

39 கோடி ரூபாய் இதுபோன்ற நிவாரணங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நாடாளுமன்றத்திலே மத்திய அமைச்சர் அறிவித்திருக்கிறார். முன்பெல்லாம் என்ன நிலை என்றால் புயலோ அல்லது வெள்ளமோ ஏற்பட்டு அல்லது வறட்சியோ ஏற்பட்டு நிவாரணம் தேவை என்றால் மாநில அரசு உடனடியாக மத்திய அரசுக்கு எழுதி நேரில் சென்று அமைச்சர்களைச் சந்தித்து, தந்தி கொடுத்து, இவ்வளவுக்கும் பிறகு அங்கிருந்து மாநில அரசையும் நம்பாமல், அவர்கள் ஒரு குழுவை அனுப்பி அந்தக் குழு மாநிலத்திலே எது வறட்சிப் பகுதி எது வெள்ளப் பகுதி, எது புயலால் பாதிக்கப்பட்ட பகுதி என்றெல்லாம் ஆராய்ந்த பிறகு, அவர்களுடைய கருணை உள்ளத்திற்குத் தகுந்தபடி இவ்வளவு கொடுக்கலாம் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அதற்குப் பிறகு மத்திய அரசு அவர்கள் 40 கோடி ரூபாய் என்றால் 20 கோடி ரூபாய் அல்லது 10 கோடி ரூபாய் என்று வழங்கி, இதுபோன்ற ஒரு பரிதாபகரமான நிலைமை, மாநிலங்களுக்கு உரிமை அற்ற ஒரு நிலை கடந்த காலத்திலே இருந்து வந்தது.

10-10 மணி

இப்போதுள்ள நிலை அப்படி அல்ல. முதலிலேயே ஒவ்வொரு மாநிலத்திற்கும் அங்கு வறட்சி ஏற்பட்டால், வெள்ளம் ஏற்பட்டால், புயல் வந்தால் நிவாரணப் பணிகளுக்காக இவ்வளவு தொகை என்று அவர்கள் ஒதுக்கிவிடுகிறார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட தொகை 39 கோடி ரூபாய். இந்த வெள்ளத்திற்கு நாம் செலவு செய்தது போக மீதிப் பணம் அப்படியே இருக்கும். அடுத்து ஒரு பெரிய பாதிப்பு ஏற்படக்கூடிய அளவுக்கு வறட்சியோ, வெள்ளமோ, புயலோ வருமானால் அந்தப் பணத்தை நாம் செலவழித்துக் கொள்ளலாம். அல்லது இந்த ஆண்டு முழுவதும் அத்தகைய செலவே இல்லாமல் போனால் அடுத்த ஆண்டு இதைப்போன்ற 39 கோடி ரூபாயோ 50 கோடி ரூபாயோ தரப்படும்போது இந்த ஆண்டு மிச்சப்பட்ட தொகை அத்தோடு அன்றைக்கு ஒரு திரண்ட தொகையாக சேர்ந்து விடும். இது தான் இன்றைக்குள்ள நிலைமை. எனவே, மத்திய அரசு கேட்டு, பணம் இப்போது தரவில்லையே தவிர, கேட்காமலே ஏற்கனவே ஒதுக்கி இருக்கிறது என்ற உண்மையைத் தான் நேற்றைக்கு நான் இந்த அவையிலே எடுத்து வைத்தேன்.

மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது போல் மற்ற எல்லா நிவாரணப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீனவர்களுடைய கஷ்டங்கள், ஆதி திராவிட மக்களுடைய கஷ்டங்கள், குடிசை வாழ் மக்களுடைய கஷ்டங்கள் இவைகளை எல்லாம் உணர்ந்து உடனுக்குடன், புயல் பாதிப்பு வந்து விடக்கூடாது என்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு இப்போது ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கான நிவாரணப் பணிகளும் இப்போது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் ஒரு அறக்கட்டளையிலே இருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் அனுப்பியிருப்பதாக நேற்றைய தினம் தகவல் தந்துள்ளார். இந்தப் பணம் வந்து சேர்ந்ததா, அளிக்கப்பட்டு விட்டதா என்று எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். விரைவிலே அது வந்து சேரும், வந்து சேர்ந்த உடன் அந்தப் பணம் அளிக்கப்படும்.

அதைப்போலவே ஆந்திர மாநில முதலமைச்சரும் ஒரு நல்ல உள்ளத்தை, நல்ல எண்ணத்தை பரிமாறிக்கொள்ளக் கூடிய வகையிலே 10 லட்சம் ரூபாய் இங்கே நம்முடைய நிவாரண நிதிக்காக அவர்கள் நேற்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள். அவருக்கும், துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பாக, இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) வனத் துறை அலுவலர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆம் தேதியிலிருந்து 10 ஆம் தேதி வரை தமிழ்நாடு பாரஸ்டர்கள் சங்கம் இங்கே தொடர் உண்ணாவிரதம் இருந்தது. அதேபோல் தமிழ்நாடு கானியல் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் 78 பேர்—பாரஸ்ட்டு பயிற்சிக் கல்லூரியில் இருக்கிற பயிற்சியாளர்கள் 78 பேர் கடந்த ஒரு வார காலமாக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய 6 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். அதிலே 24 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர்களுடைய நிலைமை மோசமாக இருப்பதாக எனக்கு இன்று காலையில் கூட தந்தி வந்திருக்கிறது. அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில் மிகவும் நியாயமான கோரிக்கைகள் அதிலே அடங்கி இருப்பதாக நானும் நினைக்கிறேன். உதாரணமாக ஒரே கல்வித் தகுதி இருந்தாலும் கூட அவர்களுக்கும் ரேஞ்சர்களுக்கும் அடிப்படைச் சம்பளத்திலே 800 ரூபாய் வேறுபாடு இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். அதேபோல் பொதுவாக பதவி உயர்வு என்று வந்தால் யாருக்கும் 3 பதவி உயர்வுகள் ஒரு அரசுப் பணியில் இருக்கின்ற நேரத்தில் கிட்டும். இவர்களைப் பொறுத்தவரையில் பதவி உயர்வுக்கே வழி இல்லாமல் 'once a mortgage always a mortgage' என்பதைப் போல, 'once a Forester always a Forester' என்கிற நிலைமை இவர்களுக்கு இருப்பதாக அவர்கள் சொல்கிறார்கள். அதிலே வந்தவர்களிலே சில பேர் 27 ஆண்டுக் காலம், 28 ஆண்டுக் காலம் பணியாற்றியும் கூட அவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். அதே போல் ரிஸ்க் அலவன்ஸ் கேட்டிருக்கிறார்கள். வீட்டு அலவன்ஸ் கேட்டிருக்கிறார்கள். நியாயமான பல கோரிக்கைகள் இருக்கின்றன. இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் போராடிக்கொண்டு வருகிறார்கள்.